# அடைய நினைந்த.



அடைய நினைந்த மூவுலகையும் ,

அடைந்த களைப்புத்தீர்ந்திட நீயும் ;

அடையாரைத் தேர்ந்தனையோ பதுமநாபனே !

அடையநினைத்த...

சிறுவுருவுடன் அன்று மாவலிமுன் வந்து ,

தருவாய் மூவடி மண்ணென நீ யாசித்து ;

கருவண்டாய் வந்த குருவின் விழிபறித்து ,

பெருவுருவுடன் மூவுலகையும் அளந்தவனே !

அடையநினைத்த....

பெறுவதற்கு அரியதான முக்திதனையும் ,

தருவதற்கென இன்று அடையாரில் நீயும் ;

வரும் பக்தர்களுக்கு பதுமநாபனாக என்றும் ,

திருவருள் புரிந்திட அங்கு சயனித்தவனே !

அடையநினைத்த........